1979 மார்ச் 17] [திரு. து. இராமசாமி]

செய்ய வேண்டிய காரியமாக இருப்பதால் இரண்டொரு தினங்களில் இதற்கு ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதனை உடனடியாகப் பரிசலிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. திருவேங்கடம், திரு. வி. கே. கோதண்டராமன் இருவரும் எழுந்து நின்றனர்.)

உட்காருங்கள். இப்படியே 235 உறுப்பினர்களும் எழுந்து பேச ஆரம்பித்தால் எப்படி அவையை நடத்த முடியும்.

(இ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைபெறும் திருட்டு குறித்து.

திரு க. மருதாசலம்: தலைவரவர்களே, நேற்று நான் சட்டமன்றத்திற்கு வரும்போது என்னிடைய அறையைப்பூட்டி விட்டு வந்தேன். அந்த அறையினுடைய பூட்டைத் திறந்து என்னுடைய இரண்டு புதிய சட்டைகளையும் இரண்டு புதிய வேஷ்டிகளையும் 368 ரூபாயையும் திருடிக்கொண்டு போய் விட்டார்கள்.

(கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற திருட்டு சம்பந்தமாக எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(மீண்டும் கூச்சல், குழப்பம்)

சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலும் பாதுகாப்பு அதிகரிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்னை

மின்சாரத்துறை அமைச்சர்மீது

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அடுத்து பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரா. உமாநாத் அவர்கள் அவை உரிமைமீறல் பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது. அதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்களும் அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டு உள்ளார்.